
372

கரூர் - தாந்தோன்றிமலை



O22:38.21192.T
N93
190153

# அருள்மிகு கல்யாண வெங்கடரமணசுவாமி

# திருக்கோவில் ஸ்தல புராணம்

உ

# அருள்மிகு
# கல்யாண வெங்கடரமண
# சுவாமி திருக்கோயில்

## தல புராணம்

வெளியீடு :

**அருள்மிகு கல்யாண வெங்கடரமண சுவாமி திருக்கோயில்**

தாந்தோன்றிமலை, கரூர்-639 005

1992

ஆசிரியர் :

'வரலாற்று வித்தகர்'

**திரு. ம. இராசசேகர தங்கமணி**

M. A., M. Phil., அவர்கள்

**M சிவசுப்பிரமணியன்**
பி. ஏ., செயல் அலுவலர்.

**ப சிவகுமார்**
பி. எஸ்ஸி., பி. எல்,
தக்கார்/உதவி ஆணையர்
இந்து சமய அறநிலைய
ஆட்சித்துறை, திருச்சி

மூன்றாம் பதிப்பு : ஏப்ரல் 1993

படிகள் ; 500

உரிமை : அருள்மிகு
கல்யாண வெங்கடரமண சுவாமி
திருக்கோயில்
தாந்தோன்றிமலை.

தல புராணம் கிடைக்குமிடம் ;

செயல் அலுவலர்
கல்யாண வெங்கடரமண சுவாமி
திருக்கோயில்
தாந்தோன்றிமலை
கரூர்-632 005

விலை : 4—00

நூலை உபயமாக அச்சிட்டு வழங்கியவர் ;
சேட்டலூர் அயலூர் **K. V. ராகவன் & Bros.**
**முரளிசுந்தரம்**
**திருமண நாள் : 25-4-1993**
ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்ட நூல்

---

அச்சிட்டோர் : காவேரி ஆர்ட் பிரிண்டர்ஸ்
29 மேற்கு வீதி அக்ரஹாரம்
சிங்காநல்லூர் கோவை-5

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அணிந்துரை | |
| 2. | முன்னுரை | |
| 3. | தாந்தோன்றிமலைத் தோற்றம் | 1 |
| 4. | பகவான் டங்கணாச்சாரிக்கு அருள் புரிதல் | 5 |
| 5. | கோயிலின் அமைப்பு | 12 |
| 6. | தாந்தோன்றிமலை-ஒரு பிரார்த்தனை தலம் | 14 |
| 7. | பூஜைகளும் திருவிழாக்களும் | 16 |
| 8. | கலைச்சிறப்பு | 19 |




ஸ்ரீ கல்யாண வெங்கடரமண சுவாமி துணை.

கு. ந. அழகப்பன், பி.ஏ, பி.டி., பி.எல்., 17-1-92
துணை ஆணையர், திருச்சி.
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.
திருச்சி.

## அணிந்துரை

தாந்தோன்றிமலையின்கண் குடிகொண்டிருக்கும் அருள்மிகு கல்யாண வெங்கடரமணசுவாமி எவ்வாறு அம்மலையின்கண் தோன்றி அருளினர் என்று கர்ண பரம்பரையாக பல்வேறு கதைகள் இருந்த போதிலும் இந்நூலாசிரியர் திருமிகு இராசசேகரதங்கமணி அவர்கள் எழுதியிருக்கும் சம்பவங்கள் உண்மை என்று ஊகிக்க பெரிதும் இடமளிக்கிறது. மேலும் அன்னர் இந்நூலில் விவரித்துள்ள பெருமாளின் அற்புதச் செயல்களும் உள்ளம் நெகிழ்விக்கக் கூடியனவாக உள்ளன.

சிவபக்தர் டங்கணாச்சாரிக்கு பகவான் அருள்புரிந்த விதம் சைவ வைணவ விகற்பங்களைத் தகர்த்து விடுகிறது.

குண்டலாச்சாரி என்ற பக்தனுக்காக பகவான் கருணையுடன் தாந்தோன்றிமலையில் எழுந்தருளி, பிறகு குண்டலாச்சாரிக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து ஆட்கொண்ட நிகழ்ச்சி பக்தி ரசம் ததும்ப விவரிக்கப் பட்டுள்ளது.

பக்தர்கள் அனைவரும் இத்தல புராணத்தினை படித்துணர்ந்து அருள்மிகு கல்யாண வெங்கடரமண சுவாமியின் அருளுக்குப் பாத்திரர்கள் ஆகுமாறு கோருகிறேன்.

அன்பன்

**கு. ந. அழகப்பன்**

ஸ்ரீ வெங்கடேசாய மங்களம்

## முன்னுரை

கோயில்கள் தமிழ்ப்பண்பாட்டின் மையமாக விளங்கி வருகின்றன. தமிழகத்தில் உள்ள எண்ணற்ற திருக் கோயில்களுள் வைணவத்தலங்களுக்குத் தனிப்பெருமை உண்டு. இத்தலங்களுள் தாந்தோன்றிமலை அருள்மிகு கல்யாண வெங்கடரமண சுவாமி திருக்கோயில் குறிப் பிடத்தக்கது. திருச்சி மாவட்டம், கரூருக்குத் தெற்கே 4 கி. மீ. தொலைவில் கரூர் - திண்டுக்கல் சாலையில் (வழி குஜிலியம்பாறை) இத்தலம் அமைந்துள்ளது.

''தென் திருப்பதி'' என்று பக்தகோடிகளால் போற்றப்பெறும் தாந்தோன்றிமலை ஒரு தலைசிறந்த புனிதத்தலமாகவும் பிரார்த்தனைத் தலமாகவும் விளங்கு கிறது இத் திருத்தலத்தில்தான் அருளே வடிவாக திருப்பதி வெங்கடாஜலபதியே கல்யாண வெங்கடரமண சுவாமி எனும் திருப்பெயருடன் எழுந்தருளியுள்ளார். இவர் வேண்டுவோர்க்கு வேண்டுவன வழங்கும் வரப்பிரசாதி.

ஏழை சோமசர்மா, சிற்பி டங்கணாச்சாரி-முதலான ஆயிரக்கணக்கான பக்தர்களுகசு அருள்பாலித்தவர் இப்பெருமாள். இப்பெருமாளின் அருமை பெருமை களைத் ''தாந்தோணிமலை மஹாத்மியம், விஷ்ணு தர்மோத்தரம், வெங்கடேச பராக்ரமம், பாகவதபுராணம் முதலான நூல்கள் விரித்துப்பேசுகின்றன.

'ஸ்வயம் வியக்த வெங்கடகிரி' எனவும் இத்தலம் போற்றப்பெறுகிறது. புரட்டாசி சனிக்கிழமைகளில் தாந்தோணிப் பெருமாளைச் சேவிக்க அலைகடலென மக்கள் திரண்டு வருகின்றனர். இப்பெருமாளின் பெருமையை உலகில் உள்ளோர் அனைவரும் அறிய வேண்டுமென்பதற்காகவே இச்சிறுநூல் எழுதப்படுகிறது.

அனைவரும் பெருமானை சேவிப்போம்! ஸ்ரீ கல்யாண வெங்கடரமண சுவாமியின் அருள் பெறுவோம்!!

## தாந்தோன்றிமலை தோற்றம் :

இவ்விஷ்ணுத்தலம், கிழக்கிலிருந்து மேற்காக அரை பர்லாங் தூரம் வியாபித்துள்ள குன்றின் மேல்புறம் அமைந்துள்ளது. இக்குன்று மேல்புறம் உயர்ந்தும், கீழ்புறம் தாழ்ந்தும் அமைந்துள்ளது. மூலஸ்தானத்தின் குகைக்கு மேலே மலை மீது கட்டப்பட்ட கோபுரம் கம்பீரமாய் பிரகாசிக்கிறது.

இக்குன்றின் மேல்புறம் குடையப்பட்டுள்ள அழகிய குடைவரையில் கல்யாண வெங்கடரமணப் பெருமாள் 'மேற்கு நோக்கி' நின்ற நிலையில் பக்தர்களுக்கு காட்சி தருகிறார். பெருமாள் லட்சுமியைத் தனது மார்பில் தாங்கிய நிலையில் பிரமாண்டமான வடிவுடன் காணப் படுகிறார். தாயாருக்கு தனி சந்நிதி இல்லை.

தாந்தோன்றிமலை எனும் பெயர்க்காரணம் குறித்து பலவிதமான கருத்துக்கள் நிலவுகின்றன. இம்மலை தானாகத் தோன்றியதாகவும், இறைவனால் தோற்று விக்கப்பட்டதாகவும், இறைவனிடம் அன்பு பூண்ட அடியார்களால் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பலவிதமாக கூறப்படுகின்றன. தாமான் தோன்றிகோன் என்னும் குறுநில மன்னன் இம்மலையைத் தனது இருப்பிடமாகக் கொண்டு இதனைச் சூழ்ந்த பகுதிகளை ஆண்டு வந்தான் என்பதனை புறநானூற்றுப்பாடலால் அறிகிறோம். (புறநானூற்று பாடல் - 399 : 30-34) ஒருவேளை இம்மன்னனின் நினைவாக இவ்வூர் இப்பெயரைப் பெற்றிருக்கக் கூடும்.

தாந்தோன்றிமலை இங்கே உண்டானவிதம் பற்றி புராணக்கதை ஒன்று கூறப்படுகிறது.

ஒரு சமயத்தில் திருப்பாற்கடலில் திருமால் (விஷ்ணு) தனது அந்தப்புரத்தில் திருமகளுடன் (லக்ஷ்மி) தனியாக மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருந்தார் அதுபோழ்து வாயிலின் வெளியில் ஆதிசேஷன் காவல். புரிந்தார். அச்சமயத்தில் வாயுபகவான் இறைவனை சேவிக்க உள்ளே நுழைய முயன்றார். ஆதிசேஷனோ வாயுபகவானை உள்ளே நுழைய அனுமதிக்காமல் தடுத்து நிறுத்தினார். இதனால் இவ்விருவரிடையே பலத்த வாக்குவாதமும், யார் பலசாலி என்பது பற்றியும் சச்சரவு ஏற்ப்பட்டது. அத்தருணத்தில் வெளியே வந்த பகவான் இருவருரிடையே மத்தியஸ்தம் செய்தார். இவ்விருவருக்கும் பகவான் போட்டியை வைத்தார். அதாவது ஆதிசேஷன் திருவேங்கடமலையைத் [வேங்கடாஜலம்] தனது உடலால் அழுத்திப்பிடித்துக் கொள்ளவேண்டும். வாயுதேவன் அதை தனது பலத்தால் அசைத்துப் பிடுங்க வேண்டும். போட்டி ஆரம்ப மாயிற்று. ஆதிசேஷன் மலையைத் தனது உடலால் சுற்றி இறுக அழுத்திக் கொண்டார். வாயுபகவான் அதனைப் பெயர்த்தெடுக்க முயன்றார். ஆனால் வெற்றி கிட்ட வில்லை கோபம் கொண்ட வாயுபகவான் தனது முழு பலமும் கொண்டு பெரும் புயலாக வீசியபோது, அம்மலையின் சிறு சிறு பாகங்கள் சிதறுண்டு நாலா பக்கமும் விழுந்தன. அவ்வாறு சிதறி விழுந்த குன்று களில் ஒன்றுதான் இந்தத் தாந்தோன்றிமலை ஆகும் திருவேங்கடமலைக்குத் தெய்வீக சக்தி இருப்பது போன்று, அதனின்றும் சிதறிய குன்றுகளுக்கும் தெய்வீக சக்தி உண்டு என்பது இதனால் பெறப்படும். இதன் காரணமாகவே இம்மலை ''தென் திருப்பதி'' எனவும் அழைக்கப்படுகிறது.

3 •

## தானே தோன்றிய மலையில்
## பகவானின் தோற்றம்

இம்மலையில் திருவேங்கடவன் எவ்வாறு தானே தோன்றினார் (ப்ரத்யக்ஷமானார்) என்பதனை விஷ்ணு தர்மோத்தரம்' எனும் வடமொழி நூல் நுண்ணிதின் விளக்குகிறது. அதனைச் சுருக்கமாகக் கீழே காண்போம்

ஒரு காலத்தில் சுசர்மா எனும் பக்தன் ஒருவன் தனது மனைவியோடு இல்லறம் எனும் நல்லறத்தை நடத்தி வந்தார். அவர்களுக்கு மகப்பேறு இல்லாதது பெருங்குறையாக இருந்தது. அவர்கள் நியமத்துடன் பல விரதங்களை மேற்கொண்டனர். ஒருநாள் நள்ளிரவில் அவன் தியானம் செய்து கொண்டிருந்தபோது, நாரதர் அவன் முன்னர்தோன்றி, 'நீ முற்பிறவியில் செய்த பாவம் தொலைய, திருப்பதியாத்திரை மேற் கொள்வாயாக' என ஆணையிட்டு மறைந்தார். சுசர்மாவும் அவனது மனைவியும் அதன்படி திருப்பதிக்கு நடந்தே யாத்திரை செய்தனர். காவிரி உற்பத்தியாகும் மலைப்பிரதேசத்தை அடைந்து புனித காவிரியில நீராடி பூசைகள் செய்து, தியானத்தில் ஆழ்ந்திருந்தனர். அதுபோழ்து நாரதர் அவ்விருவர் முன்பு தோன்றினார். "காவிரிக்கரையின் மீதே நடந்து சென்று அமராவதி ஆறு காவிரியுடன் கலக்குமிடம் செல்லுங்கள்: அங்கே சிலர் உங்களை வரவேற்று அவர்களது இருப்பிடம் அழைத்துச் செல்வர் அங்கே பகவானின் பேரருள் பெற்று, உங்களது வேண்டுகோள் நிறைவேற்றப்படும்'' என்று கூறினார். தம்பதியர் நடந்தே அமராவதி கூடுதுறை வந்து சேர்ந்தனர். அங்கு சில கல்தச்சர்கள் அவ்விருவரையும் அன்புடன் வரவேற்றனர். அவர்கள் சுசர்மாவைத் தமது தனது குருவாக ஏற்றுத் தமது இருப்பிடத்திற்குச்

பிடத்திற்குச் சகல மரியாதைகளுடன் அழைத்துச்சென்று தங்க வைத்தனர்.

மறுநாள் அனுஷ்டானம் முடித்து சுசர்மா, தச்சர்களை அழைத்துக் கொண்டு மலைக்குச் சென்று, கல் வேலையின் நுட்பங்களை அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார். பாறை ஒன்றைப் பிளந்த போது அசரீரி (தெய்வவாக்கு) சுசர்மாவைப் பார்த்து, "உனது மனைவியையும் அழைத்துக் கொண்டு நாளைக்கு இம்மலைக்கு வா'' என்று ஆணையிட்டது. (அவ்வாறு பிளந்தபாறை இப்போதும் பெருமாள் சன்னதிக்கு வடப்பக்கத்தில் காணத்தக்கதாக உள்ளது) மறுநாள் சுசர்மா தனது மனைவியையும் தச்சர்களையும் அழைத்துக் கொண்டு மலையை வலம் வந்தார்: மூன்றாவது சுற்று வரும்போது மலையின் மேல் புறத்தில் நட்சத்திரத்தைப் போன்று பிரகாசமான ஒளி ஒன்று தென்பட்டது; இதனைக்கண்டு அவர்கள் பெருவியப்படைந்தனர், பின் அவர்கள் ஒளி வந்த திசையிலே சென்று கொண்டிருந்தபோது மலையில் ஒரு பிளவு ஏற்பட்டு அதிலிருந்து அருள்மிகு திருப்பதி வெங்கடேசப்பெருமாள் தோன்றி அத்தம்பதியர்க்குக் காட்சி கொடுத்தார். எல்லோரும் பிரமித்து நின்றனர். நாரதர் வீணையை மீட்டிக்கொண்டு பகவானின் பெருமையைப்பாடிக் கூத்தாடினார். கிண்ணார் கிம்புருஷர்களும் கானம் பாடினர்: தேவர்கள் பூமாரி பொழிந்தனர். சுசர்மாவும் பகவானின் அருளைப் போற்றிப் பரவசம் அடைந்தார் 'நீ உன் மனைவியுடன் ஊருக்குத்திரும்பு, புத்திரபாக்கியம் பெற்று, மகிழ்வுடன் வாழ்ந்து, இறுதியில் என் பதவியடைவாயாக!'' என்று பகவான் சுசர்மாவுக்கு அருள் புரிந்தார். "உன்னால் இத்தச்சர்களும் நற்கதி அடைவார்கள்'' என்றும் பரமன் அருளாசி நல்கினார்: மேலும் "நான் இம்மலையில் நித்யாவாசம் செய்வேன்; என்னை நாடிவரும் பக்தர்களின் வேண்டுகோளை நிறைவேற்றி, அவர்களுக்கு அருள்புரிவேன்'' என்றும் திருவாய் மலர்ந்து

அருளினார். சுசர்மாவும் தனது ஊர் திரும்பி, புத்திர பாக்கியத்துடன் மகிழ்வுடன் வாழ்ந்தார். பகவான் திருவாய் மலர்ந்தருளியபடி இன்றுவரை பல்லாயிரக் கணக்கான மக்கள், கல்யாண வேங்கடரமண சுவாமியின் அருள் பெற்று வருகின்றனர்.

## பகவான் டங்கணாச்சாரிக்கு அருள் புரிதல்

'ஸ்ரீ வெங்கடேச பராக்ரமம்' எனும் தமிழ் நூலில், சிற்பி டங்கணாச்சாரிக்கு பகவான் அருள்புரிந்த செய்தி விளக்கப்பட்டுள்ளது. வரலாற்றுப் புகழ்மிக்க கொங்கு நாட்டுக் கருவூர் சோழரின் வசமாயிற்று. மூன்றாம் குலோத்துங்கச் சோழன் [கி.பி. 117-1218] கருரைத் தலைநகராகக் கொண்டு பெரும் பேரரசை ஆண்டு வந்தான். அவன் பலபுலவர்களையும், கலைஞர்களையும் ஆதரித்து வந்தான். அவர்களுள் டங்கணாச்சாரி என்பானும் ஒருவன். இவன் தேர்ச்சி பெற்ற சிற்பியாகவும் விளங்கியதுடன் சைவப்பற்றாளனாகவும் திகழ்ந்தான். அவனுக்கு 'சுந்தராம்பிகை' எனும் மனைவி இருந்தாள். சோழவேந்தன் இச்சிற்பியிடம் பெரும்பொருள் கொடுத்து கருவூரில் மாபெரும் சிவன் கோயில் ஒன்றினைத் தோற்றுவிக்கச் செய்தான். அங்கு அன்றாட வழிபாடு குறைவற நடைபெறத்தக்க ஏற்பாடுகளையும் செய்தான் பக்தியே உருவான டங்கணாச்சாரித் தப்பதியர்க்கு ஆண்டுகள் பல சென்ற பின்னரும் புத்திரபாக்கியம் ஏற்படவில்லை. இக்கவலை அவர்களைப் பெரிதும் வாட்டியது. ஒருநாள் டங்கணாச்சாரி அரசவைக்குச் சென்றிருந்தான். சுந்தராம்பிகை வீட்டில் தனியாக இருந்தாள். அதுபோழ்து தெருவில் கோவிந்தா! கோவிந்தா!! எனும் சப்தம் உரக்கக் கேட்டது. அவள் ஓடிவந்து தெருவைப் பார்த்தாள். ஒரு கூட்டம் ''கோவிந்தா!! கோவிந்தா''!! என்று உரக்கக் கத்திக்

கொண்டு சென்றது. அக்கூட்டத்தின் நடுவே மஞ்சள் ஆடை அணிந்து, மார்பில் துளசி மாலையுடனும், நெற்றியில் திருநாமத்துடனும் ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் காணப்பட்டான். இவளுக்கு ஒன்றும் புரியவில்லை; திகைத்தாள். அக்கூட்டத்தின் பின்னால் சென்ற ஒரு பெண்மணியிடம் இதுபற்றி விசாரித்தாள், அதற்கு அப்பெண் கூறியதாவது; ''இக்கூட்டத்தின் நடுவே செல்பவன் என் மகன் எனக்கு தொடக்கத்தில் புத்திர பாக்கியம் ஏற்படவில்லை. திருப்பதி வேங்கடேசனை நினைத்து பிரார்த்தனை செய்து கொண்டோம். குழந்தை பிறந்து ஐந்தாவது வயதில் குழந்தையையும் அழைத்துக் கொண்டு பெருமாளின் சந்நிதிக்கு வந்து காணிக்கை செலுத்துவதாக வேண்டிக் கொண்டோம். எனவே பிரார்த்தனையை நிறைவேற்ற, நாங்கள் திருப்பதிக்குச் சென்று கொண்டு இருக்கிறோம்.

இதனைக்கேட்ட சுந்தராம்பிகை வீட்டிற்குள் சென்றாள்; தானும் திருப்பதி வேங்கடாஜலபதியை பிரார்த்தனை செய்தாள் தனக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டும் எனவும், ஐந்தாவது வயதில் மகனுடன் சந்நிதிக்கு வந்து காணிக்கை செலுத்துவதாகவும் வேண்டிக் கொண்டாள் வேங்கடாஜலபதி சுந்தராம்பிகைக்கு அருள் புரிந்தார் சுந்தராம்பிகையும் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள் குண்டலாச்சாரி என்று அவனுக்குப் பெயர் இடப்பட்டது அவனுக்கும் வயது ஐந்து ஆகியது பிரார்த்தனை நிறைவேற்ற வேண்டிய காலம் வந்தது இதுவரை தனது பிரார்த்தனை பற்றித் தனது கணவனிடம் தெரிவிக்கவில்லை இனியும் காலம் தாழ்த்துவது நல்லதல்ல என அவள் எண்ணினாள் தீவிர சிவபக்தரான தன் கணவரிடம் எப்படிச் சொல்வது

என்ற பயமும் ஏற்பட்டது. மனதைத் திடப்படுத்திக் கொண்டாள்; தனது பிரார்த்தனை பற்றிக் கூறி, திருப்பதி செல்லவேண்டுமென டங்கணாச்சாரியிடம் பக்குவமாகச் சொன்னாள். இதனைக் கேட்டவுடன் டங்கணாச்சாரி கடுங்கோபம் கொண்டான் 'சிவபெருமானைத் தவிர, உலகில் வேறு சக்தியுள்ள தெய்வம் இல்லை; நான் திருப்பதிக்கு வரமாட்டேன் : உன்னையும் போக அனுமதிக்கமாட்டேன்' என்று எச்சரிக்கை செய்து விட்டு, வெளியில் சென்றுவிட்டான். சுந்தராம்பிகையோ மனம் வருந்திக் கண்ணீர் வடித்தாள். அச்சமயம் வெளியில் விளையாடிவிட்டு, வீடு திரும்பிய குண்டலாச்சாரி தனது தாய் அழுவதைக் கண்டு, அவளது மடியில் அமர்ந்து கொண்டு 'ஏனம்மா அழுகிறாய்?'' என்று வினவினான். தாய் தனது இக்கட்டான நிலையை மகனிடம் கூறினாள். இதனைக் கேட்ட குண்டலாச்சாரி ''அம்மா நீ அழாதே; கவலைப் படாதே; திருப்பதி சீனிவாசப்பெருமானை நமது ஊரிலே உள்ள மலைக்குன்றிற்கு வரவழைக்கிறேன். நாம் எளிதாக பிரார்த்தனையை இங்கேயே நிறைவேற்றலாம்'' என்றான். இதனைக் கேட்ட தாய்க்கு அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை. தனது மகனின் விளையாட்டுப் பேச்சை அவள் நம்பவில்லை.

அன்றிரவே எல்லோரும் தூங்கியவுடன், குண்டலாச்சாரி, தனது தந்தை வைத்திருந்த ஆயுத மூட்டையை எடுத்துக்கொண்டு, மலைக்குச் சென்று மலையின மீது ஆலயம் எழுப்ப அடி அளந்து கொண்டிருந்தான். அதுசமயம் சன்யாசி ஒருவர் அவன் முன் தோன்றி 'குழந்தாய்! இரவில் இங்கு வந்து என்ன செய்கிறாய்? என்று கேட்டார். குண்டலாச்சாரியோ,

தான் இங்கே கோயில் அமைத்து திருப்பதி சீனிவாசப் பெருமானை அழைக்கப் போகிறேன்'' என்று கூறினான். இதனைக்கேட்ட சந்நியாசி, 'உன்னால் இக்காரியம் முடியக்கூடியதல்ல; என்னிடம் ஆட்கள் அதிகம் இருக்கிறார்கள். அவர்கள் நாளை இங்கு வருவார்கள். எனவே நீயும் நாளை இங்குவா, கோயிலைச் சமைத்து விடலாம்' எனக்கூறி மறைந்தார். குண்டலாச்சாரி வீட்டிற்குச் சென்று உறங்கிவிட்டு அடுத்த நாள் மலைக்கு வந்தான். வேலையாட்கள் இருந்தார்கள், ஒரே இரவில் கோயிலும் கோபுரமும் கட்டி முடிக்கப்பட்டது. பின்னர் பிரதிஷ்டை ஒன்றுதான் பாக்கி; விடிவதற்குள் குண்ட லாச்சாரி வீடு வந்து உறங்கினான்.

எப்போதும் போல் டங்கணாச்சாரி அதிகாலையில் எழுந்து மலைப்பக்கம் சென்றான்; கோயில் இருப்பது கண்டு அதிர்ச்சியடைந்தான். ஒரே நாளில் கோயில் சமைப்பது என்பது மன்னனைத் தவிர வேறு யாராலும் முடியாதே!-மன்னன் என்னிடமும் சொல்லாமல் இக்கோயிலை கட்டிவிட்டானே என்று மன்னனை மனதால் நிந்தித்தவாறு, மன்னனைப் பார்க்கச் சென்றான்: மன்னனிடம் கோயில் கட்டப்பட்டிருக்கும் செய்தியைக் கூறினான். இதனைக் கேட்டு மன்னனும் வியப்பில் ஆழ்ந்தான்: தனது அதிகாரிகளுடன் மலைக்கு வந்து கோபுரத்துடன் திகழும் கோயிலைக் கண்ணுற் றான். தமக்கே தெரிவிக்காமல் விஷ்ணு ஆலயம் கட்டியவனைக் கண்டுபிடித்து தண்டிப்பதாகக் கூறிவிட்டுச் சென்றான். மனம் வருந்திய டங்கணாச்சாரி, மன்னன் கோயில் கட்டியவர்களைக் கண்டுபிடிக்கும்முன் தானே அவர்களைக் கொல்லத் துணிந்து, இரவில் மலையில் பதுங்கியிருந்தான். இதுபற்றி அறியாத குண்டலாச்சாரி

ஆயுதங்களை எடுத்துக் கொண்டு, கோயில் வாயிலில் நுழைந்தான்; யாரென்று அறியாமல் டங்கணாச்சாரி சிறுவனை வெட்டி வீழ்த்தினான். மற்ற தச்சர்களும் வருவர் என்று எதிர்பார்த்து ஏமாந்த டங்கணாச்சாரி வீட்டிற்குச் சென்று உறங்கினான். விடிந்ததும் சுந்தராம்பாள் தனது மகனைக் காணப்பெறாமல் துடித்தாள்; தேடினாள், டங்கணாச்சாரியும் ஏதோ ஞாபகம் வந்தவனாய், கோவிலுக்குச் சென்று பார்க்க குண்டலாச்சாரி வெட்டுபட்டுக் கிடப்பதைக் கண்டு. அவனை வீட்டிற்குக் கொண்டு வந்தான். ஊரார் அவன் வீட்டின் முன் கூடிவிட்டனர். டங்கணாச்சாரியோ மௌனம் சாதித்தான். தகவல் தெரிந்த மன்னன் சேவகர்களுடன் அங்கே வந்தான். அச்சமயம் சந்நியாசி ஒருவர் திடீரெனத் தோன்றி; 'டங்கணாச்சாரியைப் பார்த்து, 'துளசித்தழை ஒரு பிடி கொண்டு வா, உனது மகனைப் பிழைக்க வைக்கிறேன்' என்றார். அதனைக்கேட்டதும் டங்கணாச்சாரி தனது இரு காதுகளையும் பொத்திக் கொண்டு, 'நான் துளசியைக் கையால் தொடமாட்டேன், என்றார். இதனைக் கேட்ட மக்கள் கோபமடைந்து 'இந்த இக்கட்டான சமயத்திலும் நீர் வைராக்கியம் பேசுவது சரியில்லை' என்று சொல்லவே, டங்கணாச்சாரி அரை மனதுடன் துளசியைப் பறித்துக் கொண்டு வந்து கொடுத்தார். சந்நியாசி, தலையையும் முண்டத்தையும் சேர்த்து வைத்து, கழுத்துப் பகுதியில் துளசிச்சாற்றைப் பிழிந்து ஊற்றினார். குண்டலாச்சாரி உயிர் பெற்று எழுந்தான். அதனைக் கண்டோர் அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர்; பெருமாளின் பெருமையைப் போற்றிப் புகழ்ந்தனர். சுந்தராம்பிகை அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தன் மகனுக்கு உயிர் கொடுத்த சந்நியாசியின் பாதங்களில் விழுந்து வணங்கினாள்.

கோயில் கட்டப்பட்ட நிகழ்ச்சியையும், தான் வெட்டுண்ட நிகழ்ச்சியையும் குண்டலாச்சாரி தனது பெற்றோர் முன்னிலையில் எடுத்துரைத்தான். அதனைக் கேட்டு அனைவரும் மகிழ்ந்து, மலையை நோக்கிச் சென்றனர். சிறுவனுடன், அவனது பெற்றோர், மன்னன், அதிகாரிகள் மற்றும் பலரும் சந்நியாசியுடன் மலையேறிச் சென்றனர். ஆனால் மலை மீது சென்றவுடன் கூடவந்த சந்நியாசி மறைந்து விட்டார். குகையின் நடுவே பகவான் திருப்பதி வெங்கடேசப்பெருமாள் பிரத்தியக்ஷமாய் காக்ஷியளிப்பதைக் கண்டு, அனைவரும் வணங்கினர்; ஆனந்தக் கூத்தாடினர். சுந்தராம்பிகை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினாள். பரந்தாமனின் பெருமையை எண்ணியெண்ணி மகிழ்ந்தாள். டங்கணாச்சாரியோ கீழே விழுந்து வணங்கி தன்னை மன்னிக்கும்படி வேண்டினான் சிறுவனும் விழுந்து மகிழ்ச்சி பொங்க பகவானை வணங்கினான். உடனே பகவான் அவர்களைப் பார்த்து, "குண்டலாச்சாரி என் மீது கொண்டிருந்த அளவற்ற பக்தியைக் கண்டு மகிழ்ந்ததால்தான், நான் திருப்பதியில் இருந்து இங்கு நேரே வந்து பிரசன்னமாயிருக்கிறேன்; திருப்பதி மலையிலும்; தாந்தோன்றிமலையிலும் எனக்கு ஒரே மாதிரி பிரியம் உண்டு இனி நீங்கள் உங்களது திருப்பதி பிரார்த்தனையை இங்கேயே செலுத்துங்கள்; நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன். இனி நீங்கள் அனைவரும் இருபபிடம் திரும்புங்கள்; பல்லாண்டு நல்வாழ்வு வாழ்ந்து, பின்னர் என் பரமபதத்தை அடைவீர்கள்'' என மொழிந்தார். தாந்தோன்றியமலை வடமொழியில் 'ஸ்வயம் வியக்த வேங்கட கிரி' எனப் போற்றப்பெறுவது இங்கு நினைவு கூறத்தக்கது.

## 11

## முசுகுந்தன் பகவானின் அருள் பெற்றமை

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள், சோழவேந்தன் முசுகுந்தனுக்குக் காட்சியளித்து அருள் செய்த நிகழ்ச்சியும் இங்கு குறிப்பிடத்தக்கது. சோழநாட்டை முசுகுந்தச் சக்கரவர்த்தி ஆண்டு வந்தான் அவன் அரச காரியங்களில் ஈடுபட்டிருந்ததால், அவனால் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை; அமைதியாக ஓய்வெடுத்துக் கொள்ளவும் இயலவில்லை, எனவே, தான் சிறிது காலம் நிம்மதியாகத் தூங்க வேண்டும் என்றும், அதன்பின் தான் மோட்சமும் அடையவேண்டுமென்றும், அதற்கருள வேண்டுமென்றும் பகவானை வேண்டிக்கொண்டான். அதனைக்கேட்ட பகவான், "தெற்கே பத்ரீவனத்தை (கரூர் ரெங்கநாதப்பெருமாள் கோயில்) ஒட்டி நதிக் கரையின் தென்திசையில் கொஞ்சதூரத்தில் மலைக்குகை ஒன்றுள்ளது; அங்கு நீ நித்திரை செய்து ஓய்வெடுத்துக் கொள்; அங்கு எவரும் வரமாட்டார்கள்; எவனாலும் இடையூறு நேர்ந்தால், நீ அவனைப் பார்த்ததும் அவன் எரிந்து சாம்பலாகிப் போவான்" என்று வேந்தனிடம் கூறி மறைந்தார் பகவான். அவ்வாறே சோழன் இம் மலைக்குகையில் சில காலம் உறங்கினான். சில காலம் சென்றபின் கிருஷ்ணாவதார ரூபியான பகவான் ஒரு சமயம் நகரத்தை விட்டு வெளியே புறப்பட்டார். அச்சமயம் அவரது எதிரியான காலயவனன் எனும் கொடியவன் அவருடன் போர் புரிய எண்ணிப் பின் தொடர்ந்தான். கிருஷ்ணனும் பயந்தவன் போன்று ஓடிவந்து, முசுகுந்தன் உறங்கும் குகையில் புகுந்து மறைந்து கொண்டான். உள்ளே வேகமாக நுழைந்த காலயவனன், அறியாமல் சோழனின் காலை இடறி விட்டான். விழித்தெழுந்த சோழன் காலயவனனைப்

பார்த்தான். அக்கொடியவன் எரிந்து சாம்பலாகி விட்டான். அதனைக் கண்டு மனம் வருந்திய சோழன் முன் பகவான் காட்சி தந்து "கவலைப்படாதே! அவனை அழிக்கத்தான் நான் இவ்வாறு செய்தேன். இனி நாடு பகைவர் பயமின்றி செழிக்கும். உனக்கு நான் மோக்ஷம் கொடுக்கிறேன் புஷ்பக விமானத்தில் ஏறு" என்று பணித்தார் பகவான். பகவானைப் பேரானந்தத்தால் வணங்கிய முசுகுந்தன், இவ்வளவு காலம் நான் தங்கிய இக்குகை வியர்த்தமாகக் கூடாது; தாங்கள் இக்குகையிலேயே நித்யவாசம் செய்து வரும் பக்தர்களின் வேண்டுதலை நிறைவேற்றி, அருள்பாலிக்க வேண்டும். இவ்வேண்டுகோளைத் தாங்கள் ஏற்க வேண்டும்" என்று வணங்கினான். பகவானும் அவனது வேண்டுகோளை ஏற்று, அவனை தேவலோகத்திற்கு அனுப்பிவிட்டு, பகவான் இத்தாந்தோன்றிமலைக் குகையிலேயே தங்கி பக்தர்களுக்கு அருள் புரிகிறார். (பாகவத புராணமும் குறிப்பால் உணர்த்துகின்றது; பெரியவர்களும் இதுபற்றிக் கூறியுள்ளனர்.

## கோயிலின் அமைப்பு :

தமிழ்நாட்டில் பொதுவாகக் கோயில்கள் கிழக்கு நோக்கியே அமைந்திருக்கும். ஆனால் தாந்தோன்றிப் பெருமாள் கோயிலோ மேற்கு நோக்கி அமைந்துள்ளது. தாந்தோன்றிமலைக் குன்று கிழ மேல் திசையில் நீண்டுள்ளது. மேற்புறம் உயரம் அதிகமாகவும் கீழ்புரம் உயரம் குறைந்தும் காணப்படுகிறது. மேல்புறம் வாயில் கொண்ட இத்திருக்கோயில் ஒரு குடவறைக் கோயில் ஆகும்.

190153
சென்னை-600 008
V22:38.21192.7
N93

பகவான் எழுந்தருளியிருக்கும் கருவறை, அர்த்த மண்டபத்தின் கீழ்புறம் அமைந்துள்ளது. கருவறை மட்டுமே குடவரைக் கோயிலாக விளங்குகிறது. அர்த்த மண்டபம், மகாமண்டபம், நுழைவு மண்டபம் ஆகியவை பிற்காலத்தில் கட்டப்பட்டவையே. கருவறையில் வேலைப்பாடுகளற்ற இரண்டு பெருந்தூண்களுடன் கூடிய, பெரிய உயர்ந்த மேடை ஒன்று உள்ளது. மேடையைச் சுற்றி மூன்று புறமும் பள்ளமாக்கப்பட்டுள்ளது. இம்மேடையின் கீழ்புறம் பாறையோடு ஒட்டிய நிலையில் அருள்மிகு கல்யாண வேங்கடரமணப்பெருமாள் லட்சுமியைத் தன் மார்பில் தாங்கி நின்ற வண்ணம் மேற்கு நோக்கி காட்சி தருகிறார். பக்தர்களைப் பரவசப்படுத்தும் நிலையில் நிற்கும் பெருமாள் நான்கு கைகளைக் கொண்டுள்ளார். பெருமாள் 'பக்தபராதீனன்' எனப் புகழப்படுகிறார். அதற்கேற்ப ஒரு சமயம் இறைவனைக் கண்ணும் கருத்துமாக நெறிதவறாமல் பூஜிக்கும் அர்ச்சகர் ஒருவர் தனது உறவினர் இறந்து விட்டதால் (தீட்டு என்பதால்) தனக்குப் பதிலாக தனது மகனான சிறுவனை பூஜை செய்ய அனுப்பினார். இறைவனுக்கு நிலைமாலை சார்த்துவது வழக்கம். அன்று பக்தர் ஒருவர் பெருமாளுக்குச் சார்த்த நிலைமாலை வாங்கி வந்து அச்சிறுவனிடம் கொடுத்தார். குட்டையாக இருந்த அவன் அதனைப் பெருமாளுக்குச் சார்த்த முடியாது போகவே, அவன் இறைவனிடம் அழுது புலம்பி 'வெங்கடரமண தேவுடு, நீ குனிந்துகொள்' என்று வேண்டவே, பெருமாளும் குனிந்தார். சிறுவனும் மாலையை அணிவித்துப் பக்திப்பரவசம் அடைந்தான். இதனால் பெருமாள் பக்தர்கள் பக்தியுடன் கோரும் கோரிக்கையை நிறைவேற்றுகிறார் என்பது புலனாகும்

பெருமாள் மிகவும் சக்திவாய்ந்தவராகவும் கேட்பவர்க்குக் கேட்கும்வரம் அளிப்பவராகவும், கருணையே வடிவானவராகவும் திகழ்கிறார். இதனால் இதுவரை வணங்குபவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே உள்ளது.

## தாந்தோன்றிமலை-ஒரு பிரார்த்தனை ஸ்தலம்

இது ஒரு பிரார்த்தனைத் தலம் ஆகும். ''தாந்தோன்றிப்பெருமாளே, எனக்கு ஏற்பட்டிருக்கும் துயரங்களையும் துன்பங்களையும் போக்கி எனது குறையை நிறைவு செய்யவேண்டும்-நான் உனக்கு காணிக்கை 'செலுத்துகிறேன்' என வேண்டிக்கொள்ளும் பக்தர்களுக்கு அப்படியே அனுகூலம் செய்து தரும் சக்திமிகு தெய்வம் இது. 'தென் திருப்பதி' எனப்போற்றப்பெறும் தாந்தோன்றிமலையை ஆயிரக்கணக்கானோர் தமது குலதெய்வமாகக் கொண்டுள்ளனர், குலதெய்வமாகக் கொண்டவர்களும் மற்றும் பலரும் இப்பெருமாளின் சந்நிதிக்கு வந்து முடியிறக்குவதும், காதுகுத்துவதும் பாதம் அடிப்பதும், அபிஷேக ஆராதனைகள் செய்வதும் திருக்கல்யாண உற்சவம் செய்து வைப்பதும். ஆஞ்சநேயருக்கு வடைமாலை சாத்துவதும், தமது செல்வங்களுக்கு திருமணம் நடத்துவதும், காணிக்கை செலுத்துவதும் பிரசித்தம்.

இப்பெருமாளைக் குலதெய்வமாகக் கொண்டோர் தமது வயல்களில் விளையும் தானியங்களில் ஒரு பகுதியையும், தமது கால்நடைகளையும் இக்கோயிலுக்குக் காணிக்கையாகச் செலுத்துவது பெருவழக்கமாகியுள்ளது இப்பெருமாள் நிகழ்வித்த அற்புதங்கள் பலவாகும். அவற்றுள் அண்மையில் (1985-ம் ஆண்டில்) நிகழ்ந்த

அற்புத நிகழ்ச்சி ஒன்றினை இங்கே கூறுதல் பொருத்த முடையதாகும். இம்மலை குடிப்பாடுடைய பக்தர் ஒருவர் சேலம் சென்று, தொழில் செய்து தனது மனைவியுடன் வாழ்ந்து வந்தார். அவர்களது குழந்தைக்கு மூளைக் காய்ச்சல் ஏற்பட்டு இரு கண்ணும் தெரியவில்லை. கண் மருத்துவர் பலரிடம் சிகிச்சை பெற்றும் பலனில்லை. உடனே அந்த பக்தர் தனது வீடு திரும்பி, தனது குல தெய்வமான தாந்தோன்றிப் பெருமாளுக்கு வேண்டுதல் வைத்தார். குழந்தைக்குக் கண்பார்வை வந்து விட்டால் நடந்தே பெருமாள் சந்நிதிக்கு வந்து அபிஷேகங்கள் செய்து, காணிக்கை செலுத்துவதாக வேண்டிக் கொண்டார். பெருமாள் அக்குழந்தைக்குக் கண்பார்வை வழங்கினார். பக்தரும் சேலத்திலிருந்து தாந்தோன்றி மலைக்கு நடந்தே வந்து பயபக்தியுடனும் மகிழ்ச்சி யுடனும் தனது காணிக்கையைச் செலுத்தியதுடன், பெருமாளுக்கு திருக்கல்யாண உற்சவமும் செய்து மகிழ்ந்தார்.

இத்திருக்கோயில் பெருமாளுக்கு செம்மாளி (செருப்பு) சமர்ப்பணம் செய்தல் முக்கிய நிகழ்ச்சியாகும். பெருமாளுக்கு வேண்டிக்கொண்டார்கள் பெரிய செருப்பு ஒன்றைத் தைத்து, அதற்கு அலங்காரம் செய்து, நாமம் சார்த்தி பூ மாலை அணிவித்து, அதனை ஒரு பலகையின் மீது வைத்துத் தலையில் சுமந்து-தமது உறவினருடனும் சுற்றத்தாருடனும் தாரை தப்பட்டை முழங்க ஊர்வல மாக வந்து மலையை வலம் வந்து, மண்டபத்தில் இறக்கி வைத்து, உண்டியல் காணிக்கை செலுத்துவர். இந்த செம்மாளி சமர்ப்பணம் செய்வோர் பல நாட்கள் நோன்பிருந்து, பகவான் சொப்பனத்தில் காட்டும் காலின் அளவிற்கேற்ப செம்மாளி தைப்பர். பெருமாள்

ஒருவர் கனவில் தோன்றி இடது கால் செருப்பு தைத்து சமர்பிக்கக் கோருவார்; மற்றொருவர் கனவில் தோன்றி வலது கால் செருப்பு தைத்து சமர்ப்பிக்கக் கோருவார். அதன்படி அவர்கள் இருவரும் தைத்து சமர்ப்பிப்பர். இதில் அற்புதம் என்னவெனில், இருவர் தைத்த செருப்புகளின் அளவுகளும் பெருமாள் சொல்லும் அளவுகளுக்கு சரியாக அமைந்து ஒரு ஜோடியாக ஆகிவிடும். பெருமாள் பலரின் சொப்பனத்திலும் தோன்றி பலவாறான அளவுகளுக்கு செருப்பு தைத்து சமர்ப்பிக்க கோருவார். இதன் காரணமாக இவர்கள் சமர்ப்பணம் செய்யும் செம்மாளி வேறுபட்ட அளவுகள் கொண்டதாக இருக்கும்.

அகில இந்திய அளவில் நெரூர் சதாசிவ பிரமேந்திராள் பிரசித்திபெற்ற ஒரு மகான்; பல ஆண்டுகட்கு முன் இஞ்ஞானி தாந்தோன்றிக் குகையில் தியானத்தில் ஆழ்ந்து யந்திரஸ்தாபனம் செய்ததாகவும், புரட்டாசி மூன்றாம் சனிக்கிழமையில் மூன்றாவது ஜாமத்தில் ஆண்டுதோறும் வந்து பெருமாளை வழிபட்டுச் செல்வதாகவும் கூறப்படுகிறது. இன்றும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி-போன்ற வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் டக்தர்களும் (இந்தியர்) டெல்லி, பம்பாய், கல்கத்தா, ஐதராபாத்-முதலான நகரங்களில் வாழ்ந்து வரும் பக்தர்களும் (தமிழர்) மாதந்தோறும் இத்திருக்கோயிலுக்கு தபால் மூலம் காணிக்கை அளித்து வருகின்றனர்.

## பூஜைகளும் திருவிழாக்களும்

'ஸ்வயம் வியக்த வேங்கடகிரி' எனப் போற்றப் பெறும் இத்திருக்கோயில் வைணவ வட கலையைச்

சார்ந்தது. எனவே இம்மலையில் அர்ச்சாவதார சொரூபியாய் விளங்கும் ஸ்ரீ வேங்கடேசப்பெருமாளுக்கு வைகானச குலத்தவர்கள் ஸ்ரீ வைகானச பகவத் சாஸ்திர முறைப்படி நித்ய பூஜை உத்ஸவம் முதலானவைகளை வம்ச பரம்பரையாய் செய்துகொண்டு வருகின்றனர் கருவறையில் மூலவர் மட்டும்தான் உள்ளார் மூலவருக்குப் பக்கத்தில் தேவமார்கள் இல்லை. மூலவர் தேவியைத் தனது மார்பிலே வைத்துள்ளார். உத்ஸவ ஸ்ரீனிவாச மூர்த்திக்கு உபய நாச்சிமார்கள் உண்டு.

''அலங்காரப் பிரியர் விஷ்ணு
அபிஷேகப் பிரியர் சிவா''-என்பது முதுமொழி.

பொதுவாக விஷ்ணு கோயில்களில் அன்றாடம் அபிஷேகங்கள் நடைபெறுவதில்லை. விசேஷ நாட்களில் மட்டுமே அபிஷேகங்கள் நிகழ்வுறும். ஆனால் தாந்தோன்றிமலைப் பெருமாளோ மேற்கூறப்பட்ட முது மொழிக்கு முற்றிலும் மாறுபட்டவர். அலங்காரப்பிரியர் மட்டுமின்றி சிவனைப்போன்று அபிஷேகத்திலும் பிரியம் கொண்டவர். இவ்வகையில் இவர் மற்ற பெருமாள் களுக்கெல்லாம் மேம்பட்டவர் என்று கூடக் கூறலாம்.

## பூஜைகள்

இத்திருக்கோயிலில் ஒரு நாளைக்கு நான்கு கால பூஜைகள் நடைபெறுகின்றன. அவை முறையே 1. விஸ்வரூபம் 2. காலசந்தி 3. உச்சிக்காலம் 4. சாயரக்ஷை ஆகியனவாகும்.

உச்சிக்காலத்திற்கு முன்பு எண்ணெய்க்காப்பு, பால், தயிர், பஞ்சாமிர்தம், சந்தனம் ஆகியவற்றால் மூலவருக்கு அபிஷேகம் நடைபெறும். இதனை பக்தர்கள் கண்டு

சேவிப்பர். இதன் பின்னரே உச்சிகால பூஜை தொடரும் இந்த அபிஷேகத்தில் அநேகம் சேவார்த்திகள் [பக்தர்கள்] கலந்து கொள்வார்கள். எத்தனை அபிஷேகங்கள் வந்தாலும், எல்லோருடையதையும் சேர்த்து, ஒரே தடவையில் அபிஷேகம் செய்வது வழக்கமாய் நடந்து வருகிறது. இவ்வகையில் இத்திருக் கோயிலில் கூட்டு வழிபாடு பன்னெடுங்காலமாகவே நடைபெற்று வருகிறது என்பதை அறியலாம் மதுரை நாயக்க மரபைச்சேர்ந்த திருமலை நாயக்கர் இத்திருக்கோயிலுக்கு அறக்கொடைகள் விட்டுள்ளார்.

## திருவிழாக்கள்

தாந்தோன்றிமலை, அருள்மிகு வெங்கடரமண சுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் பல திருவிழாக்கள் நடைபெறுகின்றன அவற்றுள் இரண்டு திருவிழாக்கள் மிகவும் பிரசித்தி பெற்றுள்ளன. அவை புரட்டாசி, மாசி மாதங்களில் நடைபெறுகின்றன. புரட்டாசி மாதம் திருவோண நட்சத்திரத்திலும், மாசி மாதம் மகம் நட்சத்திரத்திலும் இங்கு தேர்த்திருவிழாக்கள் நடைபெறும். இவ்விழாக்களைக்காண நாலா பக்கங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடுவர், இத்திருவிழாக் காலங்களில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் சிறப்புப்பேருந்துகளை அதிக அளவில் விடுகின்றன.

புரட்டாசி மாதம் விஷ்ணுவுக்கு உகந்த மாதம் இம்மாதத்தில் திருவோண நட்சத்திரத்தின் போது மாபெரும் தேர்த்திருவிழா நடைபெறும். கரூர் பகுதியிலேயே இதனைப் போன்றதொரு தேர்த்திருவிழா வேறெங்கும் பிரசித்தமாக நடைபெறுவதில்லை

புரட்டாசித்திருவிழா 18 நாட்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. புரட்டாசி சனிக்கிழமை மற்றும் திருத்தேர் தினங்களில் திருக்கோயில் அதிகாலை 3-00 மணிக்கே திறக்கப்படுகிறது. இரவு 7-30 மணிவரை பக்தர்கள் வழிபாடு செய்யலாம். புரட்டாசி சனிக்கிழமைகள் அனைத்திலுமே மிகச்சிறப்பான விழாக்கோலம் தான். மூன்றாவது சனிக்கிழமை மிகவும் விசேஷமானது.

## கலைச்சிறப்பு

நமது முன்னோர்கள் கலையுணர்வு மிக்கவர்கள் 'எதிலும் கலை எங்கும் கலை' என்பதில் நம்பிக்கை கொண்டவர்கள். எனவே நம் நாட்டுக்கோயில்கள் கலையெழில் மிக்கவையாகத் திகழ்கின்றன. இதனைப் போன்று தாந்தோன்றிமலை அருள்மிகு கல்யாண வெங்கடரமணசாமி திருக்கோயிலும் கலைச்சிறப்புடன் மிளிர்கின்றது.

## குடைவரை

பெருமாள் எழுந்தருளியுள்ள தாந்தோன்றிமலைக் குடைவறை, கொங்குநாட்டுக் குடைவறைகளுள் புகழ் பெற்றது. இக்குடைவறை சேலம் மாவட்டம், நாமக்கல் லட்சுமி நரசிம்ம சுவாமி குடைவறையை ஒத்த அமைப்பும் தோற்றமும் கொண்டுள்ளதால் நாமக்கல் குடைவறைக் குடைவித்த குணசீலன் எனும் அதியேந்திரனே தாந்தோன்றிமலைக் குடைவறையையும் குடைவித்தான் என்றும், இக்குடைவறை ஏறத்தாழ கி. பி. 775-ம் ஆண்டளவில் குடையப் பெற்றிருத்தல் வேண்டும் என்றும், மத்திய தொல்பொருள் துறையைச் சார்ந்த முன்னாள் கண்காணிப்புத் தொல்லியல் வல்லுநர் திரு. ஹச். சர்க்கார் கருதுகின்றார்.

''If it were a fact, the Thanthoni Cave was also excavated by this Gunasila towards the close of the third quarter of the eighth century A. D. (Circa 775) It explains the reason for the Thanthoni Cave remaining unfinished, its Vaishnava character and also its similarity, in architectural plan with the Lakshminarasimha Cave at Namakkal'', H. Sarkar ''The Cavc ''Temple at Thanthoni, near Karur'' (கருவூர் ஆனிலையப்பர் திருக்கோயில் குடநீராட்டு விழா மலர் (1974). பக்கம்-96)

தாந்தோன்றிச் குடைவறை, கன்னியாகுமரி மாவட்டம் அழகிய பாண்டியபுரம், தென்னார்க்காடு மாவட்டம் கீழ்மாவிலங்கை ஆகிய இடங்களில் காணப்படும் குடைவறைகளுடன் ஒப்புமை கூறத்தக்கது. இம்மூன்று குடைவறைகளின் அமைப்பும் பல அம்சங்களில் ஒன்று பட்டுள்ளது. நாமக்கல் லட்சுமி நரசிம்மசாமி குடைவறையைக்காட்டிலும் இது சற்று பெரியது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கட்டிடக்கலையில் வல்லுநர் திரு. Z.A, பட்டாபிராம் அவர்களும் தனது ''சென்னை, கேரள, மாநிலம் குடைவறைகள்'' எனும் நூலில் தாந்தோன்றிமலைக் குடைவறைச் சிறப்பை நன்கு விவரித்துள்ளார்.

Z.A. Pattabiram, 'The Cave Temples of Madras and Kerala States'-Institute of Francais D' Indologie-Pondicherry.

## கருவறை

ஸ்ரீ கல்யாண வெங்கடரமணசுவாமிப் பெருமாள் எழுந்தருளியுள்ள கருவறை 19 அடி 6 அங்குலத்திற்கு 14 அடி 6 அங்குல அளவில் குடையப்பட்டுள்ளது. இதன் உயரம் 9 அடி 9 அங்குலம் ஆகும். கருவறையின் நடுவில் உயர்ந்த மேடை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தாந்தோணிக் குகையின் கர்ப்பக்கிரகத்தில் அமைக்கப்பட்டுள்ள மேடை 10' 8' அளவு கொண்டதாக உள்ளது. இம்மேடையின் கீழ்புறம் கல்யாண வெங்கடரமணசுவாமி பாறையிலேயே புடைப்புச் சிற்பமாகக்காட்சியளிக்கிறார். இம்மேடையின் மூன்று புறங்களிலும் 4' அகலத்தில் நடைபாதை ஒன்று பள்ளமாக செதுக்கப்பட்டுள்ளது பெருமாளின் உருவம் பக்தர்களுக்கு நன்கு தெரியவேண்டுமென்பதற்காக இவ்வுயர்ந்த மேடை செதுக்கப்பட்டுள்ளது.

கர்ப்பக்கிரகத்தின் வாயிலில் மேல்புறம் பாறையை ஒட்டியபடியே பூதகணங்கள் இசைக்கருவிகள் வாசிக்கும் நிலையில் உயிரோட்டம் உள்ளதாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இவை பாதாமியில் பதினோராவது குகையில் வடிக்கப்பட்டுள்ள பூத உருவங்களைப்போன்றே வடிக்கப்பட்டுள்ளன. குடைவறையின் இரு புறங்களில் தெற்கு நோக்கிய நிலையிலும் வடக்கு நோக்கிய நிலையிலும் எதிர் எதிரே நோக்குவது போன்று துவாரபாலகர் இருவர் வடிக்கப்பட்டுள்ளனர். துவாரபாலகர் உருவங்கள் முடிவு பெறாமல் உள்ளன. குடைவறையில் செதுக்கப்பட்டுள்ள சதுரவடிவிலான இரு தூண்களும் சோடனை, ஒப்பனை எதுவுமின்றி முற்றுப்பெறாமல் உள்ளது என்பதும் இங்கே நினைவு கூர்தற்குரியது,

தாந்தோன்றிப்பெருமாள் குடைவறையின் முன் காணப்படும் மகாமண்டபம் மற்றும் சந்நிதிகள் பிற்காலத்தில் கட்டப்பட்டவையாகும், இவை ஏறத்தாழ கி. பி. 12-13-ம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்டதாகத் தெரிகிறது.

கோயிலின் முகப்பில் உள்ள கப்பத்தடி முன் மண்டபத்தின் நடுவே கம்பத்தடியான் நிறுவப்பட்டுள்ளார் இதன் முன்புற மேடையில் ஆஞ்சநேயரின் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆஞ்சநேயர் மிகவும் சக்தி வாய்ந்தவர்.

தாந்தோன்றிமலையின் சிறப்புப் பற்றியும், கல்யாண வெங்கடரமண சுவாமிப்பெருமாளின் பெருமை பற்றியும் மேலே நாம் விரிவாகக் கண்டோம். வேண்டுவோர்க்கு வேண்டுவன வழங்கும் வள்ளலாகத் திகழும் பெருமாளின் அருளாசியை அனைவரும் பெற்று வாழ்வாங்கு வாழ்வோம்.

சுபம்

## இறை அன்பர்களுக்கான வசதிகள்

திருமண மண்டபம் மற்றும் பாத்திரங்கள் கட்டண
ரூ. 750-0

சுவாமிக்கு உபய திருக்கல்யாண உற்சவம்
செய்து வைக்கக் கட்டணம் ரூ. 300-0

(திருக்கல்யாண உற்சவம் செய்ய ஒரு நாள் முன்
தாகவே பதிவு செய்து கொள்ள வேண்டும். பிர
சனிக்கிழமைகள், அமாவாசை தினங்கள், புரட்டாசி
மாசி, சித்திரை ஆகிய மாதங்களில் நடைபெறு
உற்சவ நாட்கள் ஆகியவை தவிர மற்ற நாட்களி
செய்து வைக்கப்படும்.)

## நித்யபடி பூஜை கட்டளை

ரூ. 550/- மட்டும் நிரந்தர டெபாசிட்டாக முதலீ
செய்து, கிடைக்கப்பெறும் வட்டியைக் கொண்
கட்டளைதாரர் குறிப்பிடும் தமிழ்த்தேதி ஒருநாளில்
கோயில் நித்யபடி 4 கால பூஜையை செய்து சுவாமி
யின் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளலாம்.

## பூஜை நேர விபரம்

| | |
|---|---|
| விஸ்வருபம் | காலை மணி 7 முதல் 7-30 வரை |
| காலசந்தி | காலை மணி 8 முதல் 8-30 வரை |
| உச்சிக்காலம் | பகல் மணி 12 முதல் 12-30 வரை |
| சாயரக்ஷை | மாலை மணி 5-30 முதல் 6 வரை |

7B
8-57



ON THE HAPPY
OCCASION OF THE MARRIAGE
OF
**Chi: MURALI**
With
**Sow: SUBHA**
25—4—93